ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

மூலபாடம்.

அழகியமணவாளதாசர்

என்கிறதிவ்வியகவி

பிள்ளைப்பெருமாள்ஐயங்கார்

வெண்பாவினுல் அருளிச்செய்தது.

இஃது

ஊ-புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1889.

ஸ்ரீராமஜயம.

நூற்றெட்டுத்

திருப்பதியந்தாதி.

நான்முகம்.

ஏற்றமண வாள ரிசைத்தாரந் தாதிவெண்பா
தோற்றக்கே டில்லாத தொன்மாலைப் - போற்றத்
திருப்பதியா நூற்றெட் டினையுஞ்சே விப்போர்
கருப்பதியா வண்ணமுண்டா க.

பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் - வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு. (க)

பிறவாத பேறு பெறுதற்கெஞ் ஞான்றும்
மறவா திறைஞ்சென் மனனே - துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண்குருகூர் நம்பிதிருந் தாள். (உ)

முன்னே பிறந்திறந்து மூதுலகிற் பட்டவெல்லாம்
என்னே மறந்தனையோ வென்னெஞ்சே - சொன்னேன்
இனியெதிரா சன்மங்க ளின்றுமுதற் பூதூர்
முனியெதிரா சன்பேர் மொழி. (ங)

முக்கால மில்லா முகில்வண்ணன் வைகுந்தத்
தெக்காலஞ் செல்வா னிருக்கின்றேன் - தக்காரெண்
கூரத்தாழ் வானடியைக் கூடுதற்கு நாயடியேன்
போரத்தாழ் வானசடம் போட்டு. (ச)

நான்கூட்டில் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாம்
தான்கூட்டி வைத்தநலர் தான்கண்டீர் - ஆங்கூட்டச்
சிட்டருக்கு வாய்த்த திருவரங்க னின்னருளால்
பட்டருக்காட் பட்ட பயன். (௫)
ஈரிருப தாஞ்சோழ மீரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டாம் - சீர்நடுநா
டாறோடீ ரெட்டுதொண்டை யவ்வடநா டாதிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள். (௬)

சோழநாட்டுத்திருப்பதிகள் - ௪௦.

திருவரங்கம் - பெரியகோயில்.

சீர்வந்த வுந்தித் திசைமுகனு மல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ - ஆர்வம்
ஒருவரங்கங் கோயி லுகந்தவனை யாள்வான்
திருவரங்கங் கோயிற் சிறப்பு. (௧)

திருவுறையூர்.

சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள் - உறப்போந்
தறந்தையா நின்ற வரங்கா திருவாழ்
உறந்தையா யிங்குறைந்த தோது. (௨)

திருத்தஞ்சைநகரம்.

ஓதக்கே ணெஞ்சே யுனக்குமிது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை - போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று. (௩)

திருவன்பில்.

போற்றிசெய வோர்குடைக்கீழ்ப் பொன்னாடு மிந்நாடும்
நாற்றிசையு மாண்டாலு நன்கில்லை - தோற்றமிலா

எந்தையன்பி லாதி யிணைத்தா மரையடிக்கே
சிந்தையன்பி லாதார் சிலர். (௪)

திருக்கரம்பனூர்.

சிலமா தவஞ்செய்துந் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்தும் - உலகில்
பரம்பனூல் கற்றும் பயனில்லை நெஞ்சே
கரம்பனூ ருத்தமன்பேர் கல். (௫)

திருவெள்ளறை.

கல்லிருந்தான் றந்தை கமலத்தோ னக்கமலத்
தில்லிருந்தான் றந்தையரங் கேசனென்றே - தொல்லைமறை
உள்ளறையா நின்றமையா லுள்ளமே கள்ளமின்றி
வெள்ளறையான் றாளே விரும்பு. (௬)

திருப்புள்ளம்பூதங்குடி.

விரும்பினவை யெய்தும் வினையனைத்துந் தீரும்
அரும்பரம வீடு மடைவீர் - பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தங்குடிகொள் காயமுடை யீரடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம். (௭)

திருப்பேர்நகர்.

போமானை யெய்து பொருமானைக் கொம்புபறித்
தாமானை மேய்த்துவந்த வம்மானைத் - தாமச்
செழுந்திருப்பே ரானைச் சிறுகாலைச் சிந்தித்
தெழுந்திருப்பேற் குண்டோ விடர். (௮)

திருவாதனூர்.

இடரான வாக்கை யிருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார் - கடவுளர்க்கு
நாதனூ ராதரியார் நானெனதென் றாரமலன்
ஆதனூ ரெந்தையடி யார். (௯)

திருவழுந்தூர்.

அடியாராய் வாழ்மி னறிவிலாப் பேய்காள்
செடியார் வினையனைத்துந் தீரும் - முடிவில்
செழுந்தூரத் தன்னெனினுஞ் செங்கண்மா லெங்கள்
அழுந்தூரத் தன்னணிய னாம். (௧0)

திருச்சிறுபுலியூர்.

அமருவி மேய்த்த வரங்கரொதி ரார்நிற்பார்
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள் - சேமம்
உறுபுலியூர் வன்றோ லுடையா னுடைந்தான்
சிறுபுலியூ ரெந்தைமேற் சென்று. (௧௧)

திருச்சேறை.

சென்றுசென்று செல்வஞ் செருக்குவார் வாயிற்றோறும்
நின்றுநின்று தூங்குமட னெஞ்சமே - இன்றமிழைக்
கூறைக்குஞ் சோற்றுக்குங் கூறாதே பேறாகச்
சேறைக்கு நாயகன்பேர் செப்பு. (௧௨)

திருத்தலைச்சங்காண்மதியம்.

செப்புங்கா லாதவனுந் திங்களும்வா னுந்தரையும்
அப்புங்கா லுங்கனலு மாய்நின்றான் - கைப்பால்
அலைச்சங்க மேந்து மணியரங்கத் தம்மான்
தலைச்சங்க நாண்மதியத் தான். (௧௩)

திருக்குடந்தை.

தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே யழிக்குந் தளர்ச்சியோ - வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெருமகுடந் தைக்கிடந்தாய் பேசு. (௧௪)

திருக்கண்டியூர்.

பேசவரித் தென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்
கேசவனைக் காண்கவிழி கேட்கசெவி - ஈசனார்

உண்டியூர் தோறு முழன்றிரவா மற்றவிர்த்தான்
கண்டியூர் கூப்புகவென் கை. (கரு)

திருவிண்ணகரம்.

கையு முளையுங் கருத்துமுனக் கேயடிமை
செய்யும் படிநீ திருத்திஞய் - ஐயா
திருவிண் ணகராளா சிந்தையினு மெண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு. (கசு)

திருக்கண்ணபுரம்.

பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன்கண்டாய் - ஏறுநீர்
வண்ணபுரத் தாயென் மனம்புகுந்தாய் வைகுந்தா
கண்ணபுரத் தாயுன் கழல். (கஎ)

திருவாலி.

கழன்றுபோம் வாயுவினைக் கட்டாமற் றீர்த்தம்
உழன்றுபோ யாடாம லுய்ந்தேன் - அழன்று
பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து. (கஅ)

திருநாகை.

சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையினீ
ஆர்ந்ததற்கோர் கைம்மா றறிகிலேன் - பூந்துவளை
மன்னுகை யாழி வலவா வலம்புரியாய்
தென்னுகை யாயருளிச் செய். (கக)

திருநறையூர்.

செய்ய சடையோன் திசைமுகத்தோன் வானவர்கோன்
ஐயமறுத் தின்ன மறியாரோ - துய்ய
மருநறையூர் வண்டுழாய் மாயோன்செவ் வாயோன்
திருநறையூர் நின்றான் செயல். (உ0)

திருநந்திபுரவிண்ணகரம்.

செயற்கரிய செய்வோமைச் செய்யாம னெஞ்சே
மயக்குவா னைவர் வலியால் - நயக்கல்வி
சிந்திபுர விண்ணகர மென்பர்திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகர நாடு. (௨௧)

திருவிந்தளூர்.

நாடுதும்வா நெஞ்சமே நாராயணன் பதிகள்
கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள் - சூடுதும்வா
வீதியிந்த ளத்தகிலின் வீசுபுகை வாசமெழும்
ஆதியிந்த ளூரா னடி. (௨௨)

திருச்சித்திரகூடம்.

அடியா லுலகெல்லா மன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே னெஞ்சே - கொடிதாய
குத்திரகூ டங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூ டங்கருதிச் செல். (௨௩)

திருச்சிராமவிண்ணகரம்.

செல்லுந் தொறுமுயிர்ப்பின் செல்லு மிருவினையை
வெல்லு முபாயம் விரும்புவீர் - தொல்லரங்கர்
சீராம விண்ணகரஞ் சேர்மின்பின் மீளாத
வூராம விண்ணகர முண்டு. (௨௪)

திருக்கூடலூர்.

உண்டுகேட் டுற்றுமோந் துய்ப்பார்க்கு மைவர்க்கே
தொண்டுபட லாமோவுன் றொண்டனேன் - விண்டிலங்கும்
ஆடலூர் நேமிமுத லைம்படையா யன்புடையாய்
கூடலூ ராயிதனைக் கூறு. (௨௫)

திருக்கண்ணங்குடி.

கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ வின்னமென்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ - தேறுகிலேன்

என்னங் குடியா யிருந்தானின் றன்கிடந்தான்
கன்னங் குடியான் கருத்து. (உசு)

திருக்கண்ணமங்கை.

கருத்தினால் வாக்கினா லன்மறையுங் காணா
ஒருத்தனைநீ நெஞ்சே யுணரில் - பெருத்தமுகில்
வண்ணமங்கை கண்கால் வனசந் திருவரங்கம்
கண்ணமங்கை யூரொன்று காண். (உஎ)

திருக்கவித்தலம்.

காணியு மில்லமுங் கைப்பொருளு மீன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும் - சேணில்
புவித்தலத்தி லின்பமும் பொங்கரவ மேறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் கால். (உஅ)

திருவெள்ளியங்குடி.

காலளவும் போதாக் கடன்ஞாலத் தோர்கற்ற
நூலளவே யன்றி நுவல்வாரார் - கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகலூன் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர். (உகூ)

திருமணிமாடக்கோயில்.

சீரோ தருங்கதியிற் சேருகைக்கு நானுன்னை
நேரோ வணங்கினே னெஞ்சேநீ - பாரில்
அணிமாடக் கோயி லரங்கனார் நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு. (௩0)

திருவைகுந்தவிண்ணகரம்.

வணங்கேன் பிறதெய்வ மாலடியா ரல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடேன் - இணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவே னீதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு. (௩க)

திருவரிமேயவிண்ணகரம்.

வாழு மடியார் மடநெஞ்சே நம்மளவோ
தாழுஞ் சடையோன் சதுமுகத்தோன் - பாழிக்
கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டாய்
அரிமேய விண்ணகரத் தார்க்கு. (௩௨)

திருத்தேவனார்தொகை.

ஆர்க்கும் வலம்புரியா லண்டமு மெண்டிசையும்
கார்க்கடலும் வெற்புங் கலங்ினவால் - சேர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத் தூதத்
தருத்தேவ னார்தொகையுஞ் சாய்ந்து. (௩௩)

திருவண்புருடோத்தமம்.

சாய்ந்த திருவரங்கந் தண்வேங் கடங்குடந்தை
ஏய்ந்த திருமா லிருஞ்சோலை - பூந்துவரை
வண்புரு டோத்தமமாம் வானவர்க்கும் வானவனும்
ஒண்புரு டோத்தமன்ற னூர். (௩௪)

திருச்செம்பொன்செய்கோயில்.

ஊர்வேன் மடலை யொழிவேன் மடநாணம்
சேர்வேன் கரிய திருமாலைப் - பாரறிய
அம்பொன்செய் கோயி லரங்க னணிநாங்கூர்ச்
செம்பொன்செய் கோயிலினிற் சென்று. (௩௫)

திருத்தெற்றியம்பலம்.

சென்றது கால்ந் திரைநரைமூப் பானவினி
என்றுகொல் சாவறியே மென்னெஞ்சே - கன்றால்
உருத்தெற்றி யம்பலத்தை யோர்விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றி யம்பலத்தைச் சேர். (௩௬)

திருமணிக்கூடம்.

சேராத முன்செய்த தீவினைபின் செய்வதுவும்
வாரா தினிநீ மடநெஞ்சே - நேராக்

குருமணிக்கூ டத்தானைக் கொம்புபறித் தானைத்
திருமணிக்கூ டத்தானைச் செப்பு. (௩௭)

திருக்காவளம்பாடி.

செப்பேன் மனிதருக்கென் செஞ்சொற் றமிழ்மாலை
கைப்பேன் பிறதெய்வங் காண்பானை - எப்போதும்
காவளம்பா டித்திருமால் காற்று மனைதொழுது
நாவளம்பா டித்திரிவே னான். (௩௮)

திருவெள்ளக்குளம்.

நானடிமை செய்யவிடாய் நானுனே னெம்பெருமான்
தானடிமை கொள்ளவிடாய் தானானான் - ஆனதற்பின்
வெள்ளக் குளத்தே விடாயிருவ ருந்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை யொத்து. (௩௯)

திருப்பார்த்தன்பள்ளி.

ஒத்தமர ரோத்து மொளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்திற் காண்பரிய வென்னெஞ்சே - சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்து செப்பவெளி நின்றானைப்
பார்த்தன்பள் ளிக்குட் பணி. (௪0)

சோழநாடு முற்றிற்று.

பாண்டி நாட்டுத் திருப்பதிகள் - கஅ.

திருமாலிருஞ்சோலைமலை.

பணிந்தேன் றிருமாலைப் பாமாலை தாளில்
அணிந்தே னருட்டஞ்ச மாகத் - துணிந்தேன்
திருமா லிருஞ்சோலை சேர்ந்தே னெனக்கு
வருமா லிருஞ்சோதி வான். (௪க)

திருக்கோட்டியூர்.

வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீபார்த் திரங்கினாய் - தேன்பார்ப்பின்

ஓசைத் திருக்கோட்டி யூரானே யின்னமுமென்
ஆசைத் திருக்கோட்டி யாள். (௪௨)

திருமெய்யம்.

ஆளா யுனக்கன்பா யாசையாய் நாணிலியாய்
வாளா மனைவியென்று வாழ்வேனைக் - கேளாய்
திருமெய்ய மாயா சிலைகால் வளைத்து
வருமெய்ய மாயா மதன். (௪௩)

திருப்புல்லாணி.

மதயானைக் கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையா லிதயங் கனையும் - முதலாய
புல்லாணி மாலே புறத்தோர் புகழிருப்பு
வல்லாணி யென்செவிக்கு மாறு. (௪௪)

திருத்தண்காலூர்.

மாறுபட வாடையெனும் வன்கால்வர் தென்மலைமேல்
ஊறுபட ஊர்ந்த வுளைவெல்லாம் - மாறத்
திருத்தண்கா லூரான் றிருத்தண் டுழாயின்
மருத்தன்கா லூராதோ வாய்ந்து. (௪௫)

திருமோகூர்.

வாயான் மலர்கோதி வாவிதொறு மேயுமோ
மேயாம லப்பால் விளையுமோ - மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ நானே
வருமோகூர் வாயன்னம் வாழ்ந்து. (௪௬)

திருக்கூடல்.

வாழ்விப்பா னென்னமோ வல்வினையி லின்னமென்னை
ஆழ்விப்பா னென்னமோ வஃதறியேன் - தாழ்விலாப்
பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ காின் குறிப்பு. (௪௭)

ஸ்ரீவில்லிபுத்தூர்.

குறித்தொருவர் கொண்டாடுங் கொள்கைத்தோ கோதை
நிறத்தலூர் விண்டுசித்தர் நீடேர் - பிறப்பிலியூர்
தாழ்வில்லி புத்தூரொன் றைவர்க்குத் தாணிரந்தான்
வாழ்வில்லி புத்தூர் வளம். (சஅ)

திருக்குருகூர்.

வளந்தழைக்க வுண்டாலென் வாசமணந் தாலென்
தெளிர்தகலை கற்றாலென் சீசீ - குளிர்ந்தடொழில்
தண்குருகூர் வாவிச் சடகோப னூரொங்கள்
வண்குருகூ ரென்னாத வாய். (சகூ)

திருத்தொலைவில்லிமங்கலம்.

வாயு மனைவியர்பூ மங்கையர்க ளெம்பிராற்
காயுதங்க ளாழிமுத லைம்படைகள் - தூய
தொலைவில்லி மங்கலமூர் தோள்புருவ மேனி
மலைவில்லி மங்கலந்த வான். (ருo)

ஸ்ரீவரமங்கை.

வானோர் முதலா மரமளவா வெப்பிறப்பும்
ஆனேற் கவதியிட லாகாதோ - தேனேயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே
சீவர மங்கையர சே. (ருக)

திருப்பேரை.

அரைசாகி வையமுழு தாண்டாலு மின்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர் - முரைசாரும்
தென்றிருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
தன்றிருப்பே ரைப்பதியா தார். (ருஉ)

ஸ்ரீவைகுந்தம்.

தாருடுத்துத் தூசு தலைக்கணியும் பேதையிவள்
நேருடுத்த சிந்தை நிலையறியேன் - போருடுத்த

பாவைகுர்தம் பண்டொசித்தான் பச்சைத் துழாய்நாடும்
சிவைகுர்தம் பாடுந் தெளிந்து. (ருங)

திருப்புளிங்குடி.

தெளியும் பசும்பொற் சிறைக்காற்று வீச
விளியுந் துயர்போய் விடுமே - எளியேற்
கருளப் புளிங்குடிவா ழச்சுதனைக் கொண்டு
கருளப் புளிங்குவந்தக் கால். (ருச)

திருவரகுணமங்கை.

காலமு நோயுங் கருதாத வன்னைமீர்
வேலன் வெறியை விலக்குமின்கள் - மாலாம்
வரகுண மங்கையன்றாள் வண்டுழாய் மேலா
தரகுண மங்கை தனக்கு. (ருரு)

திருக்குளந்தை.

தனக்குடலம் வேறான தன்மை யுணரான்
மனக்கவலை தீர்ந்துய்ய மாட்டான் - நினைக்கில்
திருக்குளந்தை யாருனைத்த சேர்க்கைதை பாடும்
தருக்குளர்தை யாமலிருந் தால். (ருசு)

திருக்குறுங்குடி.

தாலந் திழிகுலத்துச் சண்டாள மானாலும்
மேலந் தவரதனின் மேன்மைத்தே - கோலக்
குறுங்குடிவாழ் மாயன் குரைகழற்கா ளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு. (ருஎ)

திருக்கோளூர்.

பிறப்பற்று மூப்புப் பிணியற்று நாளும்
இறப்பற்று வாழ விருப்பீர் - புறப்பற்று
தள்ளுங்கோ ளூராவிற் றுமோ தரன்பள்ளி
கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோள். (ருஅ)

பாண்டிநாடு முற்றிற்று.

மலைநாட்டுத் திருப்பதிகள் - கரு.

திருவனந்தபுரம்.

கோளார் பொறியைந்துங் குன்றியுட லம்பழுத்து
மாளாமுன் னெஞ்சே வணங்குதியால் - கேளார்
சினந்தபுரஞ் சுட்டான் றிசைமுகத்தான் போற்றும்
அனந்தபுரஞ் சேர்ந்தா னடி. (ருகூ)

திருவண்பரிசாரம்.

அடியுங் குளிர்ந்தா ளறிவுங் குலைந்தாள்
முடிகின்றாண் மூச்சடங்கு முன்னே - கடிதோடிப்
பெண்பரிசா ரங்குப் பிறப்பித்து மீளுவார்
வண்பரிசா ரங்கிடந்த மாற்கு. (சூ0)

திருக்காட்கரை.

மார்க்கமுந் தாந்தாம் வழிபடுந் தெய்வமும்
ஏற்க வுரைப்பார்சொ லெண்ணுதே - தோற்குரம்பை
நாட்கரையா முன்னமே நன்னெஞ்சே நாரணனும்
காட்கரையாற் காளாகாய் காண். (சூக)

திருமூழிக்களம்.

காண்கின்ற வைம்பூதங் கட்கு மிருசுடர்க்கும்
சேண்கலந்த விந்திரற்குந் தேவர்க்கும் - மாண்கரிய
பாழிக் களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கும்
மூழிக் களத்தான் முதல். (சூஉ)

திருப்புலியூர்.

முதல்வண்ண மாமே முலைவண்ண முன்னே
விதிவண்ண நீங்கி விடுமே - சதுரத்
திருப்புலியூர் நின்றான் றிருத்தண் டுழாயின்
மருப்புலியூர் தென்றல் வரின். (சூங)

திருச்செங்குன்றூர்.

வரவேண்டுங் கண்டாய் மதிகலங்கி விக்குள்
பொரவே யுயிர்மாயும் போழ்து - பரமேட்டி
செங்குன்றூர் மாலே சிறைப்பறவை மேற்கனகப்
பைங்குன்றூர் கார்போற் பறந்து. (சுச)

திருநாவாய்.

பறந்து திரிதரினும் பாவியே னுள்ளம்
மறந்தும் பிறிதறிய மாட்டா - சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல் லாலென்
ஒருநாவாய் வாழ்த்தா துகந்து. (சுரு)

திருவல்லவாழ்.

உகந்தார்க்கென் ஞான்று முளனா யுகவா
திகந்தார்க்கென் ஞான்று மிலனாய்த் - திகழ்ந்திட்
டருவல்ல வாமுருவ மல்லவென நின்றான்
திருவல்ல வாமுறையுந் தே. (சுசு)

திருவண்வண்டூர்.

தேவு முலகு முயிருந் திரிந்து நிற்கும்
யாவும் படைத்த விறைகண்டீர் - பூவில்
திருவண்வண் டூருறையுந் தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால். (சுஎ)

திருவாட்டாறு.

மாலைமுடி நீத்து மலர்ப்பொன் னடிநோவப்
பாலைவன நீபுகுந்தாய் பண்டென்று - சாலவுநான்
கேட்டாற் றுயிலேன்காண் கேசவனே பாம்பணைமேல்
வாட்டாற்றுக் கண்டுயில்கொள் வாய். (சுஅ)

திருவிற்றுவக்கோடு.

வாய்த்த கருமமினி மற்றில்லை நெஞ்சமே
தோய்த்த தயிர்வெண்ணெய் தொட்டுண்ட - கூத்தன்

திருவிற் றுவக்கோடு சேர்ந்தாற் பிறவி
கருவிற் றுவக்கோடுங் காண். (சுசு)

திருக்கடித்தானம்.

காண விரும்புமென்கண் கையுந் தொழவிரும்பும்
பூண விரும்புமென்றன் புன்றலைதான் - வாணன்
திருக்கடித்தா னத்தான் றிகிரியான் றண்டான்
திருக்கடித்தா னத்தானைச் சென்று. (எ0)

திருவாறன்விளை.

சென்று புனன்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்றுபுல னைந்தடக்கி விட்டாலும் - இன்றமிழால்
மாறன் விளைத்த மறையோதார்க் கில்லையே
ஆறன் விளைத்திருமா லன்பு. (எக)

மலைநாடு முற்றிற்று.

நடுநாட்டுத் திருப்பதிகள்-உ.

திருவைந்திரபுரம்.

அன்பணிந்த சிந்தையரா யாய்ந்தமலர் தூவி
முன்பணிந்து நீரெமக்கு மூர்த்தியரோ - என்பர்
எமையிந் திரபுரத்தார்க் கின்றெண்ட ராஞர்
தமையிந் திரபுரத்தார் தாம். (எஉ)

திருக்கோவலூர்.

தாமனையா ஞதியாய்த் தாவரங்க ளீறன
சேம வுயிருஞ் செகமனைத்தும் - பூமடந்தைக்
காங்கோவ லாயுதன்பின் னுக வவதரித்த
பூங்கோவ லாயன் பொருள். (எங)

நடுநாடு முற்றிற்று.

தொண்டைநாட்டுத் திருப்பதிகள் - உஉ.

திருக்கச்சி - அத்திகிரி.

பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித் திராதே - அருளாளன்
கச்சித் திருப்பதியா மத்தியூர் கண்ணன்றாள்
இச்சித் திருப்பதியா மென்று. (எச)

திருவட்டபுயங்கம்.

என்றுந் துயருழக்கு மேழைகா ணிங்களிளங்
கன்றுபோற் றுள்ளிக் களித்திரீர் - அன்றுநடம்
இட்ட புயங்கத் திருசரண மேசரணென்
றட்டபுயங் கத்தர்க்கா ளாய். (எரு)

திருத்தண்கா.

ஆட்பட்டே னைம்பொறியா லாசைப்பட் டேனறிவும்
கோட்பட்டு நாணங் குறைபட்டேன் - சேட்பட்ட
வண்காவை வண்டுவணா வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தான் றனக்கு. (எசு)

திருவேளுக்கை.

தனக்குரிய னாயமைந்த தானவர்கோன் கெட்டான்
உனக்குரிய னாயமைந்த னுய்ந்தான் - நினைக்குங்கால்
வேளுக்கை யாளரியே வேறுதவி யுண்டோவுன்
தாளுக்கா ளாகா தவர்க்கு. (எஎ)

திருப்பாடகம்.

தவம்புரிந்த சேதனனைச் சந்திரனை யித்தன்
சிவன்பிரம னிந்திரனைச் செய்கை - உவந்து
திருப்பா டகமருவுஞ் செங்கண்மா றன்மார்
பிருப்பா டகவுனையா லே. (எஅ)

திருநீரகம்.

ஆலத் திலைசேர்ந் தழியுலகை யுட்புகுந்த
காலத்தி லெவ்வகைநீ காட்டினாய் - ஞாலத்துள்
நீரகத்தாய் நின்னடியே னெஞ்சகத்தாய் நீண்மறையின்
வேரகத்தாய் வேதியற்கு மீண்டு. (எகூ)

திருநிலாத்திங்கட்டுண்டம்.

மீண்டுந் தெளியார்கண் மேதினியோர் நின்னடிப்பூப்
பாண்டரங்க மாடிப் படர்சடைமேல் - தீண்டிக்
கலாத்திங்கட் டுண்டத்தின் மீதிருப்பக் கண்டும்
நிலாத்திங்கட் டுண்டத்தா னே. (அ0)

திருவூரகம்.

நேசத்தா லன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தா ளென்றலைமேல் வைத்திலையேல் - நாசத்தால்
பாரகத்து ளன்றிநான் பாழ்நரகில் வீழ்ந்தென்கொல்
ஊரகத்து ணின்று யுரை. (அக)

திருவெஃகா.

உரைகலந்த நூலெல்லா மோதியுணர்ந் தாலும்
பிரைகலந்த பால்போற் பிறிதாம் - தரையில்
திருவெஃகா மாயனுக்கே சீருறவாந் தங்கள்
உருவெஃகா வுள்ளத்தி னோர்க்கு (அஉ)

திருக்காரகம்.

ஓராதார் கல்வி யுடையேங் குலமுடையேம்
ஆரா தனமுடையேம் யாமென்று - சீராயன்
பூங்கா ரகங்காணப் போதுவார் தாடலைமேல்
தாங்கா ரகங்காரத் தால். (அஙு)

திருக்கார்வானம்.

தாலேலோ வென்றுய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலேயெவ் வாறுடசி யாற்றினண்முன் - மாலேபூங்

கார்வானத் துள்ளாய் கடலோடும் வெற்போடும்
பார்வான முண்டாய்நீ பண்டு. (அச)

திருக்கள்வனூர்.

பண்டேயுன் றொண்டாம் பழவுயிரை யென்னதென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறுதே - மண்டலத்தோர்
புள்வாய் பிளந்த புயலே யுனைக்கச்சிக்
கள்வாவென் றோதுவதேன் கண்டு. (அரு)

திருப்பவளவண்ணம்.

கண்டறிந்துங் கேட்டறிந்துந் தொட்டறிந்துங் காதலால்
உண்டறிந்து மோந்தறிந்து முய்யேனே - பண்டைத்
தவளவண்ணா கார்வண்ணா சாமவண்ணா கச்சிப்
பவளவண்ணா நின்பொற் பதம். (அசு)

திருப்பரமேச்சுரவிண்ணகரம்.

பதத்தமிழாற் றன்னையே பாடுவித்தென் னைத்தன்
பதத்தடியார்க் கேயாட் படுத்தான் - இதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலவான்
வரமேச் சுரலிணைந்த மால். (அஎ)

திருப்புட்குழி

மால்வே ழமுமரவு மாயையும்வெற் புங்கடலும்
மேல்வீழ் படையும் விடமும்போய்ப் - பாலன்
நெருப்புட் குழிகுளிர நின்றதுங்கேட் டோதார்
திருப்புட் குழியமலன் சீர். (அஅ)

திருநின்றவூர்.

சீரறிந்து தோழிமீர் சென்று கொணர்ந்தெனக்குப்
போர முலைமுகட்டிற் பூட்டுமினோ - நேரவுணர்
பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னிமா ணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை நீர். (அகூ)

திருவெவ்வுளூர்.

நீர்மைகெட வைதாரு நின்னோ டெதிர்த்தாரும்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்கையினால் - நேர்மையிலா
வெவ்வுளத்த னேன்செய் பிழையைப் பொறுத்தருளி
எவ்வுளத்த னேநீ யிரங்கு. (கo)

திருநீர்மலை.

இரங்கு முயிரனைத்து மின்னருளாற் காப்பான்
அரங்க னொருவனுமே யாதல் - கரங்களால்
போர்மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
நீர்மலைவா ழெந்தையெதிர் நின்று. (கக)

திருவிடவெந்தை.

நின்று திரியும் பிறவியெல்லா நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையார் - இன்று
வெருவிடவெந் தைக்கே விழுமியதொண் டானேன்
திருவிடவெந் தைக்கே செறிந்து. (கஉ)

திருக்கடன்மல்லை.

செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி
முறிந்துவிழப் பாகனையு மோதி - எறிந்து
தருக்கடன்மல் லைக்குமைத்தான் றஞ்சமென்று நெஞ்சே
திருக்கடன்மல் லைக்குட் டிரி. (கங)

திருவல்லிக்கேணி.

திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகன்மின் புகன்றால் - மருந்தாம்
கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர். (கச)

திருக்கடிகை.

சீரருளா னம்மைத் திருத்திநா முன்னறியாக்
கூரறிவுந் தந்தடிமை கொண்டதற்கே - நேரே

ஒருகடிகை யும்மனமே யுள்ளுகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான். (கரு)

தொண்டைநாடு முற்றிற்று.

வடநாட்டுத் திருப்பதிகள் - கஉ.

திருவேங்கடம்.

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான் - தேனேய்
திருவேங்கடந் தொழுதேன் தீயவிழு திக்குள்
மருவேங் கடந்தனெமிவ் வாழ்வு. (கசு)

திருச்சிங்கவேள்குன்றம்.

வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன்மே லோர்முகத்தே
சூழ்கருணை யும்முனிவுந் தோன்றியவால் - கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற வழல்சரபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு. (கஎ)

திருவயோத்தி.

ஆர்க்குமிது நன்றுதீ தானாலு நெஞ்சேநீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே - சீர்க்கும்
திருவையோத் திப்புயலைச் சேரியமெய்ஞ் ஞானத்
தருவையோத் திற்பொருளை யோர். (கஅ)

திருநைமிசாரணியம்.

ஓரறிவு மில்லாத வென்போல்வார்க் குய்யலாம்
பேரறிவுண் டேனும் பிறர்க்கரிது - பாரறிய
நைம்மிசா ரண்ணியத்து நாதரடி யாரோடும்
இம்மிசார் வுண்டா யினால். (கக)

திருச்சாளக்கிராமம்.

உண்டா முறைமை புணர்ந்தடிமைப் பேர்பூண்டேன்
பண்டாங் குடிகுலத்தாற் பன்மதத்தால் - கொண்டாட்டால்

ஆளக் கிராமத்தா லல்லற்பேர் பூணுமல்
சாளக் கிராமத்தார் தாட்கு. (க00)

திருவதரியாச்சிரமம்.

தாட்கடிமை யென்று தமையுணரார்க் கெட்டெழுத்தும்
கேட்கவெளி யிட்டருளுங் கேசவனை - வேட்கையொடு
போவதரி தானாலும் போய்தொழுவோ நெஞ்சமே
மாவதரி யாச்சிர மத்து. (க0க)

திருக்கங்கைக்கரைக்கண்டம்.

மத்தாற் கடல்கடைந்து வானோர்க் கமுதளித்த
அத்தா வெனக்குன் னடிப்போதில் - புத்தமுதைக்
கங்கைக் கரைசேருங் கண்டத்தாய் புண்டரிக
மங்கைக் கரைசே வழங்கு. (க0உ)

திருப்பிருதி.

வழங்கு முயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து
விழுங்குங் கவந்தன் விறற்றோட் - கிழங்கைப்
பொருப்பிருதிக் குங்கிடந்தாற் போற்றுணித்து வீழ்த்தான்
திருப்பிருதிக் கென்னெஞ்சே செல். (க0௩)

திருவடமதுரை.

செல்வ முயிருடம்பு சேர வுரித்தாக்கி
வல்வினையி னீங்குமினோ மாந்தர்காள் - தொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்ததஞ்ச மென்று
திடமதுரை செய்தான் றிறத்து. (க0௪)

திருத்துவாரகை.

திறந்திறமாத் தாந்துய்க்குந் தீஞ்சுவையை நாடி
அறந்திறம்பிப் பாதகரோ ராவர் - நறுந்துளவ
மாதுவரை யோனே மனந்துணையாக் கொண்டென்னைக்
காதுவரை யோமெய் கலந்து. (க0௫)

திருவாய்ப்பாடி.

மலர்தமர ரோடுங் கலைகண்டா ரோடும்
பொலிந்துதிரு நாட்டிருக்கப் போவீர் - மலிந்தபுகழ்
அண்டராய்ப் பாடி யமலரடி யாரடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும். (கoசு)

திருப்பாற்கடல்.

தொழும்பாய நானல்ல சூதறிந்து கொண்டேன்
செழும்பா யலைமுத்தஞ் சிந்தி - முழங்கும்
திருப்பாற் கடலான்றாள் சேர்ந்தா ரடிசேர்ந்
திருப்பாற் கடலா மிடர். (கoஎ)

வடநாடு முற்றிற்று.

திருநாட்டுத் திருப்பதி - க.

பரமபதம்.

இடருடையேன் சொல்ல வெளிதோ பிரமன்
அடரும்விடை யோர்க்கு மரிதே - தொடரும்
கருவைகுந் தம்பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுந் தம்பெறுவார் சீர். (கoஅ)

திருநாடு முற்றிற்று.

நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி முற்றிற்று.

மன்னி லரங்கமுதல் வைகுந்த நாடளவும்
என்னு திருப்பதிநூற் றெட்டினையும் - நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாத மென்றலைமேற் பூ. (க)

பதின்ம ருரைத்த பதியொருநூற் றெட்டும்
துதிசெய்ய வந்தாதி சொன்னான் - அதிக
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன் வகுத்து. (உ)

அழகியமணவாளதாசர் திருவடிகளேசரணம்.